விலை ரூபா: 14.00

பக்கங்கள்:-(14+8)

Registered as a News paper in Sri Lanka




# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 27 திங்கட்கிழமை (10.06.2002) தொலைபேசி 3378 ஒலி 173

### புலிகள்- அரச பிரதிநிதிகள் கூடி நின்று அஞ்சலி செலுத்த

# சிம்மக்குரலோன் தலைவர் சிவசிதம்பரத்தின் பூதவுடல் நேற்று அக்கினியுடன் சங்கமம்

(வடமராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்ணியின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் பூதவுடல் நேற்றுமாலை 3.30 மணியளவில் அன்னாரின் குடும்ப மாயானமான கரவெட்டி சோனப்பு மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

அமரரின் சிதைக்கு அன்னாரின் மகன் சத்தியேந்திரா தீ மூட்டினார்.

அமரரின் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், கல்வி மான்கள், தொழிலதிபர்கள், கட்சித் தொண்டர்கள், மற்றும் பொது மக்கள் என ஆயிரக்கணகானோர் வடமராட்சியில் திரண்டனர்

இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவென தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்வி மேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் அருள்மாஸ்ரர், நீதிநிர்வாகப் பிரிவுப் பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வடமராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் தயா, அரசியல் பிரமுகர் அரசன்னா

மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கருஜெயசூரியா, அவரது பாரியார் திருமதி ஜெயசூரியா, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாகடர் ஜெயலத் ஜயவர்த்தனா, பாராளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர், இந்துக் கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன்

பொ.ஐ.முன்னணிப்-பாராளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம.பி சாதசிவம், நவசமாஜக் கட்சி எம். பி ஹத்தேக தேரர்

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்காளன எம்.கே.சிவாஜிலிங்கம்,

(8ம் பக்கம் பார்க்க)

### புலிகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை

# இந்தியாவின் ஒத்துழைப்பில்லாமல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது

## பிரதமர் ரணில் பெங்களூரில் தெரிவிப்பு

(பெங்களூர்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு எடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பும், உதவியும் அவசியம் தேவையானது.

இந்தியாவின் உதவியின்றி சமாதான முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்கமாட்டாது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குரிய சரியான நிலைப்பாட்டை அரசு எடுத்துள்ளதினால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று பெங்களூரில் தெரிவித்துள்ளார்.



தலைவர் சிவாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தப்படுகிறது

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று பெங்களூரில் தெரிவித்துள்ளார்.

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதுடில்லி செல்லுமுன்னர் பெங்களூர் விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

பெங்களூர் விமான நிலையத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் செய்தியாளர்கள் பல கேள்விகளைத் தொடுத்தனர்.

செய்திளார்களின் சரமாரியான கேள்விகளுக்கு பிரதமர் அளித்த பதில் விபரம் வருமாறு:

நீண்டகாலமாக இருந்து வரும் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அரசு தற்போது உறுதியாக உள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வந்த நீண்டகால யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப்புலிகளுடன் அரசு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்பு அமைச்சர் சீனாவுக்குப் பயணம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தியோக பூர்வவிஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுச் சீனா சென்றுள்ளார்.

சீனா சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சர் சீனாவின் இராணுவத்

(8ம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதிப்பு

## சமாதானப் பேச்சு மேலும் தாமதமாகலாம்!

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது நோர்வே தனது பங்களிப்பினை ஒரு அனுசரணையாளராகவோ, இடையீட்டு நடுவராகவோ வைத்துக் கொண்டால் போதுமானது. சமரசப் பேச்சாளர் என்ற நிலைக்கு செல்லுதலாகாது "என்று அரசாங்கம் கேட்டுக்கொள்ள இருப்பதாக அறியப்படுகிறது.

இருவாரங்களுக்கு முன்பு நோர்வே, இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் கேள்விக் கொத்துக்களை வழங்கி தாம் பேச்சுகளில் எந்தவகைப் பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# பூரணஹர்த்தாலுக்கு ஒத்துழைப்புவழங்க மனித நேய அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நூறு நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவ்வுடன்படிக்கையில் கூறப்பட்ட பல விடயங்கள் அரசினால் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இயல்பு நிலைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய புதிய பல நடவடிக்கைகளும் இக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக

✳ மீன்பிடித் தடை முற்றாக நீக்கப்படாமை.

✳ மீன்பிடி தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில் புதிய நடைமுறைகள் 23.05.2002 விஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டமை.

✳ புதிய இராணுவ நிலைகள் அமைக்கப்படுகின்றமை.

✳ எமது தாயகத்தின் பொருளாதார வளங்கள் வெளிநாட்டவர்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றமை.

(8ம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வர் ஜெயாவை பிரதமர் நாளை சந்திப்பார

(சென்னை)

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நாளை செவ்வாய்க்கிழமை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சென்னையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பு 12ம் திகதி நடைபெறுவதாக இருந்த போதிலும் அன்றைய தினம் தமிழக முதல்வர் புதுடில்லி சென்று குடியரசுத் தலைவர் பிரதமர் வாஜ்பாய் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதால் பிரதமர் ரணிலுடனான சந்திப்பு நாளை இடம் பெறவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்காவுக்கு தமிழக ஆளுநர் அளிக்கும் விருந்திலும் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொள்வார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிக்கு; தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5418)

### தவறிவிட்டது

பொன்னம்பலம் யோகேஸ்வரா வீரபத்திரர் கோவிலடி, கச்சாய்வீதிசாவகச்சேரி- என்பவரது அடையாள அட்டை தே. அ. அ. 790532635V) வி.அ.அ (091010874) என்பன இருபாலைக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் சாரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5419)

### தவறிவிட்டது

சண்முகலிங்கம் சிவகுமாரன் புலவனார்வீதி நல்லூர் யாழ்ப்பாணம் 742704025V என்னும்இலக்கமுடையஎனது தேசியஅடையாளஅட்டையும் எனதுவிசேட அடையாளஅட்டையும் பேசுடன் திருநெல்வேலிச்சந்திக்கும் கல்வியங்காட்டுச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள தயவுசெய்து மேலே குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் சன்மானம் வழங்கப்படும். (கி-4350)

## நயினையில் மண்டபத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி ஆலய 'அமுதசுரபி' அன்னதானமண்டபம் இன்றுதிங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

அமுத சுரபி அன்னதான சபைத்தலைவர் த சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராகதீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளர் செ.இரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (க-10,8)

## ஆளுமையும் ஆக்கமும்

### நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதியின் 'ஆளுமையும் ஆக்கமும்' என்ற நூல வெளியீடும் நூற்றாணடு விழாவும் நேறறுதிருநெல்வேலி வேதாந்த மடத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வெளியீட்டுரையை பண்டிதர் சு. வேலுப்பிள்ளை நிகழ்த்தினார்.

அறிஞர்கள், பிரமுகர்கள், ஆர்வலர்கள பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-06)

### நடமாடும்

இவ்வைத்தியஇலவசசேவை ஆனைக்கோட்டைச் சாவல்கட்டு மகாத்மாசனசமூகநிலையத்திலும் சுழிபுரத்தில் சிறுவர் பாடசாலைக்குஅருகிலும வாராந்தம் ஒரு தடவை இச்சேவை நடத்தபபட்டு வருகிறது.

ஒருசேவையில் வாராந்தம் அறுபதிற்கும் மேற்பட்ட நோயாளிகள் இந் நடமாடும் சிகிச்சை பெறுகின்றனர். அதிகமானவர்கள காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-252)

# தலைவர் பிரபாவின் தலைமையை ஏற்றுக்கொண்டவர் அமரர் சிவா

## அஞ்சலிஉரையில் இளம்பரிதி

(நமது நிருபர்)

இந்த உலகில் மனிதர்கள் பிறக்கின்றார்கள். இறக்கின்றார்கள். ஆனால் பிறக்கின்ற சிலர் இறந்தும் இறவாமல் இருக்கின்றார்கள். இறக்காத மனிதர்களில் அமரர் சிவசிதம்பரம் அவர்களும் ஒருவர்.

அவர் மக்களுக்காகவாழ்ந்தவர். மக்களுக்காக வாழ்பவர்கள் எப்பொழுதுமே இறப்பதில்லை. அவர்களை மக்கள் நினைவு கூர்ந்து கொண்டே இருப்பார்கள். வரலாறு அவர்களை நினைவு கூரும்.

நேற்றையதினம் கரவெட்டியில் நடைபெற்ற அமரர் மு. சிவசிதம்பரத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போது விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வரலாற்று ரீதியாக எங்களுடைய விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றதை நீங்கள் அறிவீர்கள். தந்தை செல்வநாயகம் அவர்கள் ஒரு கட்டத்தில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் இவ்வாறு சொன்னதை நாங்கள் அறிவோம். தமிழர்களாகிய நாம் இந்த நாட்டில் சமத்துவமாக, ஒற்றுமையாக, ஒன்றுபட்டு வாழ விரும்புகின்றோம்.

ஆனால் நீங்கள் எங்களுடைய வாழ்வுரிமையினை மறுத்து, எங்களைஅடக்கியாள நினைக்கின்றீர்கள். நாங்கள் அதற்கு எதிரான அகிம்சை வழிப் போராட்டங்களை மேற்கொண்ட போது நீங்கள் எங்களைஅழிக்க நினைக்கிறீர்கள் எனவே உங்களுடன் பேசவும் முடியாது. போராடவும் முடியாது.

ஆனால் என்றோ ஒரு நாள் எமது அடுத்த சந்ததி உங்களோடு போராடும் அப்பொழுது அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் பதில் சொல்ல முடியாது அந்த அடிப்படையில் தோற்றம்பெற்ற எமது விடுதலைப் போராட்டம் இன்றுவலுப் பெற்றபோராட்டமாக திகழ்ந்துகொண்டிருக்கிறது வரலாற்று ரீதியாக விடுதலைப்போராட்டம் ஒன்றுக்கு தேசிய உணர்வுமிக்க கருத்துக்களை அன்றைய காலத்தில் அமரர் சிவசிதம்பரம் அவர்கள் வழங்கியிருந்தார்.

1974ம் ஆண்டு தமிழாராய்ச்சிமாநாடு நடந்தபோது தமிழருடைய பிரச்சினைக்கு தனித் தமிழீழம்தான் ஒரே முடிவு எனக் கூறியவர்களுள் அமரர் சிவாவும் ஒருவர்.

1961ம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டத்தின்போது குண்டர்களும், காடையர்களும் பெண்கள்மீதுதாக்க முற்பட்டபோது அதற்குள்புகுந்து தனது தலையைக் கொடுத்து தலையில் காயப்பட்டவர். தனது இனத்திற்காக தன்மானத்திற்காக துணிச்சலோடு செயற்பட்டவர்.

எமது விடுதலைப்போராட்டத்தின் இன்றையகட்டத்திலே ஒவ்வோர்தமிழ்மகனும் ஓர் தலைமையின்கீழ் இலட்சியத்தைநோக்கி அணிதிரள்வதன் மூலம் தான்எமதுஇலட்சியத்தின் உரிமைகள் இறைமைகள் மீட்கப்படும் என்பதை தன் ஆழ்ந்தஅரசியல்முதிர்ச்சியின் மூலம் கண்டறிந்தவர்.

தமிழர்களும் தமிழ்பேசும் முஸ்லிம்களும் ஒருதலைமையின்கீழ் ஒன்றுபடுவதன்மூலம் தான் தமிழர்கள் கௌரவமாகவும் தனித்துவமாகவும் வாழமுடியும்என்ற தீர்க்கதரிசனமான முடிவுக்கு வந்தவர்.

அந்தஅடிப்படையில் எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய தலைமையிலே நம்மையும்இணைத்து மக்களையும் இணைத்தபண்பாளனை நாம் இழந்துவிட்டோம் என்றுகூறினார். (த-10,19,23,41)

# மலரப்போகும் சமாதானத்தைக் காண தலைவர்சிவா எம்மிடையே இல்லை

## அமைச்சர் கரு ஜெயசூரியா

(நமது நிருபர்)

நாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருந்திருந்தால் அமரர் சிவசிதம்பரத்தின் இறுதியாத்திரையில் கலந்து கொண்டு தேசியஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தி இருப்பார்.

இவ்வாறு அமரர்சிவசிதம்பரத்தின் இறுதியாத்திரையில் கலந்து கொண்டு அஞ்சலி உரைநிகழ்த்திய எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

அங்கு அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தும் நோக்குடன் ஐ.தே.கட்சிசார்பாக இவ் நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு உண்மையில் பெருமை அடைகின்றேன் பிரதமர்சார்பாகவும் எமது கட்சிசார்பாகவும் இவ் அரசியல்வாதியின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புஎனக்கு கிடைத்துள்ளது.

இன,மத,மொழிவேறு பாடின்றி அனைவரும் கலந்து கொள்ளும் இவ் இறுதிக்கிரிகையினை பார்க்கும்போது உள்ளம் பூரிப்படைகின்றது. தேசியஒற்றுமை மதஒற்றுமை மொழிஒற்றுமையுடன் அனைத்து மக்களும் கலந்து கொள்ளும் இந்நிகழ்வினை பார்க்கும்போது விடிவுமிகத் தொலைவில் இல்லைஎன்பது தெளிவாகின்றது.

மேலும் சுதந்திர இலங்கைத் தீவில்மலரப்போகும் சமாதானத்தினை காண்பதற்கு அமரர்சிவசிதம்பரம்இல்லை என்பதை நினைக்கும்போது உள்ளம் வேதனைஅடைகின்றது. இந்த சுதந்திர சமாதானத்திற்காகப் பாடுபட்ட ஓர் தமிழ் அரசியல்வாதியினை இந்த நாடு இழந்துள்ளமை துரதிஷ்டவசமானதாகும்.

இந்தநாட்டின் அனைத்து மதங்களும் ஒன்றுபடவேண்டும் ஓர்குடையின்கீழ் வாழ வேண்டும்எனஅமரர்சிவசிதம்பரம் எண்ணி வாழ்ந்தார் அந்த எண்ணம் இன்று நிறைவேறிஉள்ளது.

ஆனால் அதைக்கண்டு இன்புற இன்று எம்மிடையே அந்த உத்தம தலைவர் இல்லை. எப்படி ஒற்றுமையாக வாழ்ந்தோம். எவ்வாறு இருந்தோமோ அதுபோலவே இனி வரும் காலங்களிலும் இருக்கவேண்டும் என்பதே எமது விருப்பும் ஆசையும் ஆகும்.

இந்த மதத்தினையையோ எவ்இனத்தினையையோ நாங்கள் வரமாகபெற்றுக்கொள்ளவில்லை. அது இயற்கையிலே வந்தது. இனவேறுபாடு மதவேறுபாடு இருந்தாலும்நாங்கள் ஓர் இனமக்கள் என்ற உண்மையினை இந்த வேளையிலே கூறவேண்டும். குறிப்பாகஅபிவிருத்தியடைந்தநாடுகளில் உள்ள மக்கள் இந்த அபிலாஷைகளுடனே இன்று வாழ்ந்துவருகிறார்கள்.

எனவேஅந்தப்பொன்னான யுகத்தையும் ஒற்றுமையான காலத்தையும் கட்டியெழுப்ப அனைத்து மக்களும்பாடுபடுவோம் என்றுஅமைச்சர் கரு ஜெயசூரியா கூறினார். (இ-10, 19, 23, 41)

# தமிழர் பண்பாட்டை காப்பதே சிவாவுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்

## உலகத் தமிழர் பேரவை தலைவர் ஜனார்த்தனன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

நாற்பது ஐம்பது ஆண்டுகளாக பொதுவாழ்வில் ஈடுபட்ட சிவசிதம்பரம் ஐயா அவர்கள், இப்போது இறுதிப் பயணத்தை தனது சொந்த ஊரிலேயே மேற்கொண்டுள்ளார். இந்த சரித்திரநாயகனின் மறைவு தமிழினம் சந்தித்த ஒரு பேரிழப்பாகும்.

இவ்வாறு உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

அமரர் சிவசிதம்பரத்தின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

அமரர் சிவா ஐயாஅவர்கள் கொழும்பிலிருந்து தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டு யாழ். நோக்கிவந்தபோது, வலு இழந்த வவுனியாவை, பய்போல் கிழிந்திருக்கின்ற கிளிநொச்சியை, இடித்து விட்ட பரந்தனை, சரிந்துவிட்ட சாவகச்சேரியை, கால் உடைந்துவிட்ட கைதடியை, நரம்புகள் எல்லாம் அறுந்து இசைக்க முடியாத யாழ்ப்பாணத்தை கடந்து வந்தார்.

இவற்றை எல்லாம் சீர் செய்து செப்பனிட்டு மீளக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் மீளாத்துயில் கொள்ளும் ஐயாசிவாவைஎவராலும் எழுப்பவே முடியாது.

நீதி, நேர்மை, உண்மை தியாகம் ஆகிய உயர்பண்களுடன் வாழ்ந்த சிவாஐயா எங்களுக்கு மட்டும் சொந்த மானவர் அல்லர், தமிழ்நட்

(7-ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் ஏற்பாட்டில் புவியியல்துறை மண்டபத்தில் இன்று பிற்பகல்2மணிக்கு பேராதனை பல்கலைக்கழக பொறியியல்துறைப் பேராசிரியர் எஸ்.சிவசேகரம் இன்றைய சர்வதேசஅரசியல் நெருக்கடிகள் என்னும் பொருளில் கருத்துரைவழங்கவுள்ளார். (த)

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஒடையம்பதி கற்பகவினாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள்நடைபெறும் உற்சவத்தை அடுத்து23ம்திகதி தேர்த்திருவிழாவும் 24ம்திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ம)

## விபத்தில் சிங்களப் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

டொல்பின் ரகவாகனமும் ஆட்டோவும்மோதி விபத்துக்குள்ளானதில்தோள்மூட்டு கழன்ற நிலையில்சிங்களப்பெண் ஒருவர் யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முத்திரைச்சந்தியில் நேற்று மாலை6மணியளவில் இந்த விபத்துச்சம்பவம் இடம் பெற்றது. (த)

## இராசி பலன்

10-6-2002
(வைகாசி 27 திங்கள்)
அமாவாசை வை 5 47 வரை
ரோகினி நள்ளிரவு 12.55வரை
இராகுகாலம் 7.22- 8.52
நல்ல நேரம் 11.52-1.22

**மேடம்**
காரியம் கைகூடும், தந்தை வழி உறவு, புதிய முயற்சி, தெய்வ தரிசனம்.

**இடபம்**
சுப செலவு,காரிய அலைச்சல், ஜன வசியம், நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
நல்ல நிகழ்வு, பிறர் உதவி, தொழில் நன்மை,பெரியோர் மதிப்பு.

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம்,பிரயாணம்.

**சிங்கம்**
தொழில் நன்மை, தனவிரயம், மனக்கிலேசம், இனிய சம்பவம்.

**கன்னி**
இனிய சம்பவம், அந்நியர் உதவி, முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

**துலாம்**
மாதர் நட்பு, பண விரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

**விருச்சிகம்**
வியாபார நன்மை, பிரயாண கஷ்டம், குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.

**தனுசு**
பகைவர் உறவு, லட்சுமிகரம், திடீர் நன்மை, சகோதரர் உதவி.

**மகரம்**
இனிய சம்பவம், கூட்டு முயற்சி, செல்வாக்கு, மனச்சஞ்சலம்.

**கும்பம்**
சென்ற இடத்தில் சிறப்பு, சயன சுகம்,கற்பனை மிகுதி, போசன சுகம்.

**மீனம்**
சுப செலவு பொருள் விரயம், காரிய தாமதம், தெய்வ சிந்தனை.

வளவன்

(பழையநேரப்படி கணிப்பிடப் பட்டது)

## ஓமந்தையில் படையினர் கெடுபிடி
# வன்னி எம்.பி. சிவசக்தி ஆனந்தன்
# பாதுகாப்பு அமைச்சில் முறையீடு

(வவுனியா)

யாழ்ப்பாணம் வருகின்ற பயணிகள் ஓமந்தை சோதனைச்சாவடியில் அனுபவிக்கின்ற சிரமங்கள் குறித்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டுவிட்டதாக அரசு பெரியளவில் பிரசாரம் செய்து வருகின்றபோதும், ஓமந்தை சோதனைச்சாவடியில் மக்கள் படுகின்ற துன்பங்களை நேரில் கண்டறிந்துள்ளேன்.

பயணிகள் இராணுவத்தினரின் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்படுவதுடன் பல அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

# 3மாதத்தில் 321 கொலைகள் 1387 கொள்ளைச் சம்பவம்

### பொலிஸ் நிலையம்தரும் தகவல்கள்

(கொழும்பு)

இவ்வருடம், ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாத இறுதிவரை நாட்டில் 321 படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்படுகொலைச் சம்பவங்களைவிட 1387 கொள்ளைச்சம்பவங்களும், 184 ஆட்கடத்தல் சம்பவங்களும் 23 கப்பம் கேட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

# முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு சவுதிஅரேபியா உதவும்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்களின் சமயகலாசார வளர்ச்சிக்குஉதவப் போவதாக சவுதிஅரேபியாவின் சூராக் சபை உறுதி அளித்துள்ளது.

அண்மையில்ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மாவத்தையில் இலங்கை முஸ்லிம் மத்திய கலாசார நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்ட சபைத் தலைவர் கலாநிதி அஸ்லை சாலிபின் அப்துல்லாபின் மஃதூர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, இவ்வைபவத்தில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டின் மசூர் உரையாற்றும் போது,

வடக்கு பகுதிகளில் குடியேறவுள்ள முஸ்லிம் மக்களின் நலன்களை கவனிப்பதற்காக சவுதியரேபியாவின் உதவிகளை எதிர்பார்த்து இருப்பதாக தெரிவித்தார். (உ-8)

# இந்திய தேசிய செய்மதி அமைப்பின் பணிகள் இலங்கைக்கும் விஸ்தரிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் தனது தேசிய செய்மதி அமைப்பின் வசதிகளை இலங்கையிலும் விஸ்தரிக்கவுள்ளது.

இந்தியாவின் இம் ஸாட் நிறுவனத்துடன் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையினை அடுத்தே இந் நடவடிக்கை இடம் பெறவுள்ளது.

தொலைத் தொடர்பாடல், தொலைக்காட்சி, ஒலிபரப்பு, வானிலையியல்மற்றும் தேடிக் கண்டுபிடித்தல் போன்ற விடயங்களை கையாளக் கூடிய பல் நோக்கு செய்மதி முறையான இம் ஸாட் நிறுவனத்துடன் ஸ்ரீலங்கா ரெலிகொம் செய்து கொண்ட உடன்படிக்கை மூலம் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# யாழ்ப்பாணத்திற்கான தபால்களை ஒரே நாளில் விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் எந்தப்பகுதியில் இருந்தும் அனுப்பப்படும் தபால்களை ஒரே நாளில் யாழ்ப்பாணத்திற்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது.

ஒரே நாள்தபால் விநியோகத்திட்டத்தை இம்மாதம் 15ம் திகதி முதல் அமுல்படுத்த இருப்பதாக வெகுஜனத்தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்கார் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாணத்திற்கான தபால்கள் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமே யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படுகின்றது, இதனால் தபால் விநியோகத்தில் பெரும் தாமதம் நிலவி வருகின்றது. ஆனால் புதிய திட்டப்படி யாழ்ப்பாணத்திற்கான தபால்பொதிகள் வவுனியா வரை ரயிலில் எடுத்து வரப்பட்டு அங்கிருந்துலொறிகள் மூலம் தரைமார்க்கமாக எடுத்துவரப்பட்டு உடனடியாக விநியோகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

# பிக்கு மாணவர் குழு யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் இருந்து 30 பௌத்த பிக்கு மாணவர்களும் இரண்டு பேராசிரியர்களும் அடங்கிய குழு ஒன்று சமாதான நல்லெண்ணவிஜயமாக கடந்த வியாழனன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இவர்கள்அனைவரும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்ததுடன்,குடா நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டனர். (த-19)

### புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களினது கூட்டுறவுச் சிக்கனக்கடன்வழங்கும்சங்கத்தின் அங்கத்தவர்களினது உயர் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் எஸ். சந்திரசேன இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்படி 2001, 2002 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் தற்போதுகோரப் பட்டுள்ளன.

சங்கத்தில் அங்கத்துவம் பெற்று 5வருடம் பூர்த்தியான உறுப்பினர்களின் பிள்ளைகளே புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் 2000ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரஉயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து முதற்தடவையாக அனுமதி பெற்றுள்ளமாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ- 5)

### பரீட்சைக்கான
# வயதுஎல்லை நீக்கம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வயதெல்லை தொடர்பான கட்டுப்பாட்டை கல்விச் சேவை ஆணைக்குழு நீக்கியுள்ளதாகஆணைக்குழுவின் செயலாளர் டி. எம். எம். தென்னக்கோன் அறிவித்துள்ளார். (க-0)

# ஆய்வு கட்டுரைகள் கொழும்பிற்கு

(யாழ்ப்பாணம்)

தேசியமறை ஆசிரியர்களின் யாழ். மறைமாவட்ட 3ம் ஆண்டு இறுதித் தேர்வுக்கான ஆய்வுக்கட்டுரைகள் திருத்துவதற்காக கொழும்பு தேசிய மறைக்கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மறைக்கல்விநடு நிலையம்தெரிவித்துள்ளது. (க- 6)

### காரைநகரில்
# தொடரும் திருட்டுகள்

(காரைநகர்)

காரைநகர் வடமேற்கு, மேற்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் இரவுவேளைகளில் ஆட்கள்இல்லாத வீடுகளில் ஓடுகள், மரங்கள் என்பன களவாடப்படுகின்றன.

காரைநகர் வடமேற்கு அறுகம்புலம், ஆயிலி கிராமங்களில் மீளக்குடியமர்ந்தோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனைப் பயன்படுத்தியே ஆட்கள் இல்லாத வீடுகளில் இவ்வாறான விஷமத்தனமான செயல்கள் நடைபெற்றுவருகின்றன. (க-246)

# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை 01

(இன்று கொடியேற்றம்)



### அமைதித் திறனெய்த ஏறும் கொடி

கூறும் அடியார் குறைதீர்த்துக்,
குணமாய் வாழ்வு குதுகலிக்க,
ஊரும் உறவும் உளம்மகிழ,
உண்மை அன்பு உறுதிபெற,
சீரும் சிறப்பும் திருவுமுற (த்)
தேசம் அமைதித் திறனெய்த
ஏறும் கொடியை நாகம்மாள்
ஏற்றி அருள்வாள் நயினையிலே

-நயினைக் கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை

### கொடியேறு தினம் துதி பாடுவோம்

நயினையில் வீற்றிருக்கும் அம்பாளே
நல்லாட்சி தனைச் செய்யும் நாகம்மாளே
நானிலம் போற்றிட நற்கதி நாம்பெற
கொடியேறி தினம் துதி பாடுவோம்.

சிந்தையை கலக்கிடும் சத்தங்கள் ஓய்ந்திட
சீர் பல பெற்று தரணியில் வாழ்ந்திட
சாந்தி சமாதானம் எங்குமே நிலைத்திட
கொடியேறு தினம் துதி பாடுவோம்.

-சி. திருச்செந்தூரன்

### வருவாய் நீ கொடியேறியே!

கொடியேறிவா தாயே கொடியேறிவா
கொடியோர்தம் மனம்மாற கொடியேறிவா
அடிமேலே அடிவைத்து அடியாரெலாம்
அலைபாயும் கடல்தாண்டி நயினா நகர்ப்
படியேறி வந்தாருன் பதம் காணவே
பணிந்தேத்தி நின்றாருன் புகழ்பாடியே
விடிவேதும் தருவாய்நீ தமிழ் வாழவே
விரைந்தோடி வருவாய் நீ கொடியேறியே!

-கவிஞர் - நயினை இராகுலன்

### கொடியேற்றம் காண்பாம்

நாகபதி நாகர்பதி தன்னில் மேவும்
நாகேஸ்வரிபுகழ் நா நிலமுமோங்க
நாடுகின்ற அடியார்கள நாளு மோங்க-கொடும்
நாகங்கள் அன்னைதனை நகர்ந்து போற்ற

நான் மதமும் அடியார்கள் நயந்தபாட- விறல்
நாற்படையும் தகர்த் தெறியும் மறமும் ஏங்கும்
நாற்றிசையும் அன்னையள் லாட்சி பொங்கும்
வாண்மையுயர் நயினை அன்னை கொடியேற்றம்-
காண்பாம்.

-ப. குணேந்திரன்

### மகிழ்ச்சியைத் தந்திடவே

கொடியேறு நயினை நாகம்மா கொடியேறு
கொடும் வினைகள் அழித்தே கொடியேறு! -உந்தன்
படியேறும் அடியார்கள் பாவங்கள் தீர்த்திட
பல்லாண்டாய்ப் படுகின்ற வேதனைகள் தீர்த்திட
கடிதென நீயும் நயினையில் கொடியேறு! - நாம்
கவிமலர் சொரிந்திடவே நீயும் கொடியேறு!
மடியேந்தி நிற்கின்ற மக்கள் யாவருக்கும்
மகிழ்ச்சியைத் தந்திடவே நீயும் கொடியேறு!

-கவிநேசன்

### 'அருள் பொழிவாய் அம்மா!

''அகிலமெல்லாம் போற்றிடும் ஆதி நாயகி நீ
அண்டமெல்லாம் காத்திடும் ஆனந்த சொரூபிணி
தேடி உனை நிதம் நாடி வந்தோர்க் கெல்லாம்
வேண்டும் வரம் கனிந்தளித்திடும் அன்னை நீ
ஓடி வந்தோம் உனைத் தஞ்சமென்றே கூவி
இன்னல் களைந்து ஈழவர் நலம் காக்க நீ
அருள் பொழிவாய் அம்மா நயினைப் பதியினிலே
கொடியேற்றி நின்றிடும் எழில் நாகபூஷணித்தாயே,

(4-ம் பக்கம் பார்க்க) - ''நயினை விஜயன்''

நயினை நாகபூசணி . .

## நயினைக் கொடி

நயினை வீட்டின் தேவிக்கு கொடியேற்றம்
நான்கு தமிழும் வாழ்த்தும் கொடியேற்றம்
துயிலும் வாழ்வு கலைக்கும் கொடியேற்றம்
தொடரும் சமாதானம் நிலைக்கும் கொடியேற்றம்

-புலேந்தி - திலீப்காந்த்

## பொன் மலர் பாதம் தொழ

கன்னற் தமிழில் கவிதை புனைந்தேற்றி
மன்று பு.ழ்மணி பல்லவத் (து)- அன்னைதன்
மென்மலர் பாதம் மெய் யாய்தொழ முன்வினை
பின்னும் தொடரா தறும்.

-சண்

# காரைநகர் ஊர்காவற்றுறை படகு சேவை நேரத்தை மாற்றக் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகரிலிருந்து ஊர் காவற்றுறைக்கான பாதை படகுச் சேவை நேரத்தை மாற்றித் தருமாறு அப்பகுதியைச் சேர்ந்த அரச ஊழியர், வர்த்தகர்கள் மற்றும் ஆசிரியர்கள் காரைநகர்கடற்படை பொதுஜன அதிகாரிக்குமகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

தற்போது காலை 8.30 மணிக்கே இச் சேவை இடம் பெறுவதால் உரியநேரத்திற்கு கடமைக்கு செல்ல முடியா திருப்பதாகவும் இச்சேவையை காலை 8.00 மணிக்கு நடத்த ஏற்பாடு செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-246)

# மனித உரிமை ஆணைக்குழுவை சந்திக்க பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகைதர வுள்ள மனித உரிமை ஆணைக் குழுவை நாளை 11 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு கைதாகிக் காணாமல் போன வர்களின் பாதுகாவலர்சங்கத்தின் உறுப்பினர்கள் சந்திக்கவுள்ளனர்.

யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் இடம்பெற வுள்ள இச் சந்திப்பில் கலந்து கொள்ள கைதாகிக்காணாமல் போனவர்களின் பாதுகாவலர் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் 11 ஆந் திகதி காலை 8.00 மணிக்கு யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் கூடுமாறு சங்கச் செயலாளர் சற்குணம் கேட்டுள்ளார். (ந)

# தாபனக்கோவையை தமிழில் வெளியிடுக

அரச ஊழியர் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப் படுகின்ற தாபன விதிக் கோவையினைதமிழிலும்வெளி யிடுமாறு அரச ஊழியர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்,சிங்களம்,ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் வெளியிடப்படுகின்ற இத் தாபனக்கோவை கடைசியாக 1996 ஆம் ஆண்டு வெளி வந்தது.

ஆனால் தமிழ் மொழி மூல மான கோவை 1982ஆம் ஆண்டு வெளிவந்ததன் பின் இது கால வரைதமிழில்வெளி வரவில்லை.

எனவே தமிழ்,முஸ்லிம்அர சாங்க உத்தியோகத்தர்கள் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வசதியாக அவர்களின் நன்மைகருதி தாபனக் கோவையின் தமிழ்ப் பதிப்பை வெளியிடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-03)

# இறைதியானஇல்லபோதகர் கிளிநொச்சியில் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இறைதியான இல்ல போதகரான அகஸ்தீன் மொண்ட காட் அடிகள் இம் மாதம் 18 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி,முல் லைத்தீவு மறைக் கோட்டத்தில் குணமாக்கல் வழிபாட்டுகளை நடத்தவுள்ளார்.

அங்கு வழிபாடுகளைமுடித் துக் கொண்டு யாழ்.நகரிற்கு விஜயம் செய்து இங்கும் தம் குணமாக்கல் வழிபாடுகளை நடாத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கடந்த வருடமும் யாழ்ப்பாணம்விஜயம் செய்து குணமாக்கல் செப வழிபாடு களை மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-06)

# அராஜகங்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர் அமரர் சிவா

## இ.த.ஆ.பொதுச்செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த கால நாற்றாண்டிற்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராக செயலாற்றி, சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்ட அராஜகங்களுக்கு எதிராக தனது இடிபோன்ற குரலினால் கண்டனக் குரல் எழுப்பியவர் தலைவர் சிவசிதம்பரம்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத் தின் மறைவையொட்டி இலங்கை தமிழர்ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தமிழ் மக்களின் விடுதலையை தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்து ஒற்றுமையை பலப்படுத்திய தோடு,இளைய தலைமுறையினரின் தலைமைக்கு வழிவிடல் வேண்டும் எனச் சிந்தித்து செயல்பட்ட கர்ம வீரர் அமரர் சிவசிதம்பரம்.

கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பல பாதிப்புகளுக்கு எதிராகபாராளுமன்றில்குரல் எழுப்பி நிவாரணம் பெற்றுத் தந்தவர் அமரர்சிவசிதம்பரம் ஆவார்.

# ஐ. நா. செயலர் பதவிக்கு இலங்கையரும் போட்டி

## ஆதரவுதேடும் முயற்சியில் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள்சபையின் தலைமைச் செயலர் பதவிக்கு இம்முறை இலங்கை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ போட்டியிடவுள்ளதாக அரச உயர்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் தற்போதைய ஐ.நா. செயலர் கோபிஅனான் ஓய்வு பெற உள்ளதால் செயலர் பதவிக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இலங்கைப் பிரதிநிதி டிரோன் பெர்னாண்டோ விற்கு சர்வதேச மட்டத்தில் ஆதரவு பெறும் முயற்சியில்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பிரபலமான புள்ளிகள் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிக உயர்ந்த பதவியான ஐ. நா. செயலர் பதவிக்கு இலங்கை பிரதிநிதி ஒருவர் போட்டியிடுவது இதுவே முதன்முறையாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# மனித உரிமைகள் குழுவினர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நால்வர் மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின்தலைவர் கொடஸ்ரே குணதிலக, செயலாளர் ஆர்.சி. கருணாகரன், ஆணையாளர்கள் என். செல்வகுமரன், திருமதி மனோகரி முத் தெட்டுவேகம, சரத்குரே ஆகியோரே இக்குழுவில் அடங்குவர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பாக அரச அதிபர், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், அரசசார் பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை சந்திக்கவுள்ளனர். (க-03)

# கேகாலையில் 16 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

போலிநாணய தாள்களை வைத்திருந்த 16 பேரை கேகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாவெல்லைப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் முப்பத்திரண்டை இவர்கள் வைத்திருந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைக்காக கேகாலை பொலிஸ் நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (க-8)

# மானிப்பாயில் இரவு-பகல் சேவை

(சண்டின்ப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் கிறின் வைத்திய சாலை இன்று முதல் 24 மணி நேரமும் தனது சேவையை வழங்க உள்ளது.

இதுவரையில் பகல் வேளையில் மட்டும் வைத்திய சேவை வழங்கப்பட்டது. இச் சேவை இரவுக்கும் நீடிக்கப்படுவதால் இப் பகுதியில் உள்ள நோயாளர் பெரிதும் நன்மை பெறுவர் என நம்பப்படுகிறது. (க-255)

# இம்மாதம்முடிவடைவதற்குள் பல்கலைக்கழகங்களுக்கு நிதி வழங்கப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 13பல்கலைக் கழகங்களிற்கும் தேவையான நிதி இம் மாதம் முடிவடைவதற்கு முன் வழங்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

திறைசேரி அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களிற்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ள இப்பணம் மூலதனச் செலவுகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

அதேநேரம் கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயகுமார துங்க பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு குறித்து ஆராயுமாறு நிதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-08)

# ஜனாதிபதி இத்தாலிபயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்க பண்டாரநாயக்க திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு இத்தாலி பயணமானார்.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் கட்டுநாயக்கா விலிருந்து இவர் பயணமானார்.

ரோம் நகரில் ஆரம்பமாக உள்ள உலக உணவு மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாகவே இவர்இத்தாலிபயணமானார். இத்தாலிய ஜனாதிபதி, மற்றும் பிரதமரையும் இவர்சந்திப்பார். (க-8)

# வடக்கு- கிழக்கில் கஷ்டப் பிரதேச ஆங்கில ஆசிரியரை நிரந்தரமாக்குமாறு கோரி

## பிரதமருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் கஷ்டப்பிரதேசங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வரும் ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்க கோரி பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா மஹ்ரூப் நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினாலேயே இவ் மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான கருணாசேன கொடித்துவக்கு, ஜே. எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீமுக்கும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதன் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மஹ்ரூப் நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில், புதிய நியமனங்களை அரசாங்கம் வழங்குவதாயின்ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு நிதியும், காலமும் தேவைப்படும். எனவே ஏற்கனவே சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்க வேண்டும் என அதில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-8)

# மஹா கும்பாபிஷேகம்

(சுதுமலை)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய இராஜகோபுர பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-252,8)

# நடமாடும் இலவச மருத்துவ சேவை

(சுதுமலை)

தென் இந்திய திருச்சபையினரால் நடமாடும் இலவச மருத்துவ சேவை ஒன்று வாராந்தம் நடத்தப்பட்டு வருகின்றது.

(2-ம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை

'லார்ட் பைரன்' என்ற பெயரைக் கேட்டாலே உலகிலுள்ள ஒவ்வொரு ஆங்கிலேயரும்அந்த கவி மாமனிதருக்கு தலைவணங்கி நிற்பார்கள். முன்னைய காலத்திலே லார்ட் பைரனுக்கு பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும் அனுப்பினோர் ஏராளம்!ஏராளம்! இன்றும்அவருடைய வாசகங்களை எடுத்துக்காட்டாக கூறுபவர்கள் உளர். அவருடைய எழுத்தாற்றலுக்கு பலரும் மண்டியிட்டனர். லார்ட் பைரனுடைய இளமைக் காலத்திலே 'ஹாரோவில்' படிக்கும்போது சரித்திர பிரசித்தமானவர்களின் வீர சாகசங்கள் இவருக்கு நிறையப் பிடிக்கும். அதனாலே குத்துச் சண்டை, வீர தீர விளையாட்டுக்கள், நீச்சல், கிரிக்கெட் போன்ற எல்லாத் துறைகளிலும் முதன்மையானவனாக திகழ்ந்தார். பலமுறை பரிசில்களும், பதக்கங்களும் பெற்றார்.

இத்தகைய லார்ட் பைரன் கருணை மிக்கவர், இளகிய மனமுடையவர், பிறர்படும் இன்னலைக் கண்டு பொறுக்க முடியாதவர், அநீதியும், அக்கிரமமும்எங்கும்நிலவும்போது அதையெல்லாம்தட்டிக்கேட்க வேண்டுமென்று எண்ணுபவர், உள எழுச்சி மிக்கவர்.

ஒருநாள், 'ராபர்ட் பீல்' எனற மாணவன் மீது, இன்னொரு மாணவன் ஏறி உட்கார்ந்து தாக்கிக்கொண்டிருந்தான். துன்புறுத்திக் கொண்டிருக்கிறான். அடிக்கும் மாணவனோ பெரிய தோற்றமுடையவன், மிக்க பலசாலி, வீர தீர நுட்பங்கள் தெரிந்தவன்.

அதனால் அத்தகைய வலிமை மிக்க மாணவனை தாக்கவோ, மோதவோ போதிய வலிமையில்லாத பைரனுக்கு, அந்த துன்பத்தைப் பார்த்து பொறுக்கவும் முடியவில்லை. எனவே அந்த மூர்க்கத்தனமான மாணவனை அணுகி,

'இன்னும் எத்தனை அடிகள் அவனுக்கு அடிக்கப் போகிறாய்?' என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் 'நான் எத்தனையும் அடிப்பேன், உதைப்பேன் அதைப்பற்றி உனக்கென்ன?' என்று கோபமாகப் பதிலளித்தான்.

கண்களை சுண்ணீர் தழுவ 'இல்லை', உனக்கு சம்மதம் ஆனால் அவனுக்கு கொடுக்கும் அடிகளில் 'பாதியை எனக்குக் கொடு' என்று கூறினார் லார்ட் பைரன்.

உடல் பலம் மிகுதியாக இல்லாதபோதும், பைரனின் உள பலத்தை, வலிமையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதுமட்டுமன்றி, பின்னர் லார்ட் பைரன் கிரீஸ் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தில் தான் வலியச் சென்று வீர மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

இத்தகைய கருணையும், இரக்க சிந்தையும் இல்லையெனில் அவர் ஒரு மகா கவிஞனாக புகழ் பெற்றிருக்க முடியாது. 'கருணை பொங்கும் நெஞ்சம் அது கடவுள் வாழும் இல்லம்' என்பதை உணர்ந்து பிற உயிர்களிடம் கருணையாக இருக்க வேண்டும். களங்கமில்லா வெள்ளை மனத்தினரிடம் வஞ்சக எண்ணம் இராது. இதற்கு லார்ட் பைரனின் வாழ்க்கை ஒரு பாடம். இதை பின்பற்றினால் நாமும் மறைந்த பின்னும் வாழும் மாமனிதர்களாக மாறலாம்.

தென்புலோலியூர்
பரா. நமேஸ்

# தமிழ்வானில் பிரகாசித்த விடிவெள்ளி இன்று அஸ்தமித்து விட்டது

### யாழ் மா. மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்

''கடந்த அரை நூற்றாண்டு காலமாக தமிழ் இனத்திற்காய் பாராளு மன்றத்திலும், வெளியிலும் குரல் எழுப்பிய அந்த வெண்கலக் குரல் இன்று அடங்கி விட்டது. தமிழ் வானில் பிரகாசித்த விடிவெள்ளி இன்று அஸ்தமித்து விட்டது''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் மறைவையொட்டியாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்ட இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''உடுப்பிட்டி சிங்கம் என்ற அடைமொழிக்கு உரித்தான பெருந்தலைவர் சிவசிதம்பரம் அவர்களின் மறைவு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும். சட்டமாமேதைஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா ஆகியோரின் வழியில் கறைபடியாத அரசியல்வழி நடந்து வந்த உன்னத தலைவர் இன்று நம்மத்தியில் இல்லை''

தமிழ் இனத்தின் விடிவிற்காக அயராது பாடுபட்ட மூத்த தலைமகன் அன்னார். அரசியல் காழ்ப்புணர்ச்சி அற்றவர். எவரையும் எதிரியாக கருதாது கண்ணியவான். 1962 இல் தமிழரசுக் கட்சி ஒழுங்கு செய்த சாத்வீக முறையிலான சத்தியாக்கிரக போராட்டத்தில் அமரர் சிவா தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்த போதிலும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை கைவிட்டு இப் போராட்டத்தில் கலந்து அப்போதைய ஆளுவோரின் காவல் துறையினரால் தாக்குதலுக்கு ஆளானார்.

அது மட்டுமல்லாமல் தமிழினம் பிரிந்திருந்தால் ஆபத்தானது என்பதை உணர்ந்து 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், 2001 இல் தமிழர் தேசிய கூட்டமைப்பையும் உருவாக்குவதற்கு பெரும் காரண கர்த்தாவாக இருந்தார்.

இன்று தமிழ் மண் ஒரு தலைவனை இழந்து சோக கீதம் இசைக்கின்றது. குடும்பத் தலைவனை இழந்த குடும்பம் போல் தமிழ் பேசும் மக்கள் இன்று காணப்படுகின்றார்கள்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும், தலைவனை இழந்து சோகக் கடலில் மூழ்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ் இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பட்டங்கள் பெறுவதனால் மட்டும் ஒருவர் கல்விமானாகிவிட முடியாது

### இணுவில் மத்தியகல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெறும் பட்டங்கள் பெறுவதன் மூலம் மட்டும் ஒருவர் கல்வி மானாகிவிட முடியாது. தொடர்ந்து கற்றுக் கொண்டே இருப்பதன் மூலமும், கற்றதை கொண்டு நடைமுறைவாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுவதன் மூலமுமே ஒருவன் கல்விமான் என்ற தகுதியை பெறக்கூடியதாக உள்ளது.

நீர்வேலி சீ. சீ. த. க பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.இராசசேகரத்திற்கு வழங்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இணுவில் மத்திய கல்லூரி அதிபரும் இலக்கிய வாதியுமான துரை எங்கரசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள் தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; கல்வியின் நோக்கம் வாழ்வின் முழுமை அடைதலே. அந்த வகையில் வாழ்க்கையை அர்த்தம் பொதிந்ததகாக மாற்றுவதன் மூலம் பிறருக்கு பயன்படக் கூடிய ஒரு வாழ்வை வாழ்பவர் அதிபர் இ. இராசசேகரம் ஆவார்.

ஆத்மீகத்தையும், லௌகீகத்தையும் தமது வாழ்வில் இரண்டறக் கலந்து வாழ்விற்கு செழுமை ஊட்டிய ஒருவராக சீ.சீ.த.கபாடசாலையின் முன்னாள் அதிபர் விளங்குகின்றார் என நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் தனது ஆசி உரையில் குறிப்பிட்டார்.

மாணவரின் கலை நிகழ்வுகள், பிரமுகர்களின் உரைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(க)

# இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து பெருமளவு மக்கள் திருமலை வருகை

(திருகோணமலை)

திருகோணமலையில் மீளக் குடியேறுவதற்காக பெருந்தொகையான மக்கள் இராணுவக் கட்டுப்பாடற்றபிரதேசங்களிலிருந்து வந்துள்ளதாக மீள் குடியேற்ற அதிகாரசபையின் தலைவர் எஸ். சுகைதீன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப்புலிகளினாலும பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்தே, மக்கள் மீளக் குடியேறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திருகோணமலை நகர்புற பகுதிகளில் 216குச்சவெளிக்கு 329 மூதூருக்கு 157,தம்பலகாமத்துக்கு 106 பேரும்மீளக் குடியமர்வதற்காக திரும்பியுள்ளனர்.

இவ்வாறு மீள்குடியேறுவதற்காக வரும் மக்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்கும் நோக்குடன், முஸ்லிம்விவகார அமைச்சர் ராவூப்ஹக்கீமின் பணிப்பின் பேரில், மாவட்ட செயலாளருக்கு 30 இலட்சம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-08)

# சித்திரவதை வழக்கில் பாதிக்கப்பட்ட நபருக்கு 10ஆயிரம் வழங்க பணிப்பு

(கொழும்பு)

கொள்ளைசமபவம்தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை சித்திரவதை செய்தது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்தகொழும்பு உச்சநீதிமன்றம் மனுதாரருக்கு 10ஆயிரம் ரூபா நஷ்டஈடுவழங்குமாறு தீர்ப்பளித்துள்ளது.

சித்திரவதை செய்த பேலியகொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனது சொந்தப்பணத்தில் 5 ஆயிரம் ரூபாவும் மீதியை அரசாங்கமும் வழங்க வேண்டும் எனவும் அந் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(க-03)

# வருடாந்த உற்சவம்

(உரும்பிராய்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் தேர், தீர்த்த உற்சவங்கள் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

(க-215,8)

# புதிய அடையாள அட்டை விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

தற்போதைய காலகட்டத்தில் தனி நபர் ஒருவர்தம்மை சரியாக அடையாளம் காட்டிக் கொள்ளும் வகையில் நவீன அடையாள அட்டை வழங்கும் திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் உபயோகத்திலுள்ள அடையாள அட்டைக்குப் பதிலாகவேஇவ் அடையாள அட்டைஅறிமுகப் படுத்தப்படவுள்ளது.

(க-03)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற அபிவிருத்திதொண்டர் பயிற்சிநெறியில் கடமையாற்றிய அபிவிருத்தி பரிசோதகர்கள், போதனாசிரியர்களுக்கு எதிர்கால வேலைவாய்ப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிப்பதற்காக அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரியகுளத்திற்கு அருகாமையிலுள்ள புதிய உயர்கல்வி நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அபிவிருத்தி தொண்டர்பயிற்சி போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

(க)

# சைவசமய ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் சைவசமயம் சற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சைவபரிபாலனசபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கருத்தரங்கில் தரம் 6—11 வரை சைவ சமய பாடம் கற்பிக்கும் தீவக கல்வி வலய ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் மு.ப. 8.30 மணிக்கு வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா அறிவித்துள்ளார்.

(க-03)

## சிந்தனைக்கு விருந்து

### ஆரமுதே: அவதாரம் எருத்திரு!

ஆண்டவனே! பாற்கடலிற் பள்ளி கொள்ளும்
ஆரமுதே! சீதரனே! அனந்தன் பாயல்
வேண்டியே எத்தனைநாள் கிடப்பாய்? எங்கள்
வேதனைகே ளாச்செவிடோ உன்றன் காது?
மீண்டொருகால் அவதாரம் எடுத்தே நல்ல
மேலவரைக் காத்திழிந் தோரை மாய்த்து
மாண்புறவே இவ்வுலகை வைத்துச் செல்ல
மாதவனே! ஒரொருகால் வருவை ஐயா!

-பழையவன்

அனந்தன் - ஆதிசேடன் பாயல் - பாய் (Mat)

# பாகிஸ்தானின் நீர்மூழ்கிக் கப்பலை முறியடிக்க இந்தியா தயார்

## கடற்படைதளபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய கடற்படை, போருக்கு எந்நேரமும் தயாராக இருப்பதாக கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் மார்வீத்திரசிங் தெரிவித்துள்ளார்.

ஜாராடோனில் இந்திய இராணுவ அக்கடமியின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் போருக்கு ஆயத்தமாக இந்திய கடற்படைக்கு 4மணி நேரம் போதும் என்றார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:-

பாகிஸ்தானின் நீர்முழ்கிக் கப்பல்களை எதிர்த்து முறியடிக்க கடற்படை முழு ஆயத்தமாக இருப்பதாகவும் மும்பை, காண்டிவா போன்ற துறைமுகங்களுக்கும் குஜராத் மாநிலத்தில் கடலுக்கடியில் எண்ணெய் கொண்டு வரும் குழாய்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் மேற்கு கரையோரங்களில் உள்ள துறைமுகங்கள் மற்றும் எண்ணெய் கொண்டுவரும் குழாய்கள் என்பனவே தனது முக்கிய இலக்குகள் என்று பாகிஸ்தான் கடற்படைத் தளபதி மிரட்டல் விடுத்திருந்ததற்கு பதிலளிக்கும் வகையில் இந்திய கடற்படைத் தளபதியின் பேச்சு அமைவதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(க-04)

# இந்தியா- பாகிஸ்தான் நேரடிப் பேச்சு அவசியம்

## சீனா கோரிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தான்-இந்திய நாடுகளிற்கிடையே இடம் பெற்று வரும் காஷ்மீர் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமெனில் இவ்விரு நாடுகளும் நேரடிப்பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவேண்டுமென சீனா இவ் விருநாடுகளையும் கோரியுள்ளது.

அண்மையில் சென்பீற்றஸ் பேக்கில் நடைபெற்ற மத்திய ஆசிய நாடுகளின் தலை வர்களின் உச்சி மாநாட்டில் பங்கு பற்றிய பின்னர் சீன வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்தை பொறுத்த மட்டில் இவ்விரு நாடுகளிடையேயான உறவு அபாயகரமான நிலையாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வளைகுடா நாடுகளும் இதே போன்ற கோரிக்கையை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-08)

# அமெரிக்க துருப்புகள் பிலிப்பைன்ஸ் புறப்பாடு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் இராணுவ வீரர்களிற்கு பயிற்சியளிப்பதற்காக ஆயிரம்அமெரிக்கப் துருப்புகளைஅமெரிக்கா அங்கு அனுப்பிவைத்துள்ளது.

சர்வதேச தீவிர வாதிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்கா பிலிப்பைன்ஸ்சிலும் உள்ள தீவிரவாதிகளை கட்டுப்படுத்தும்நோக்குடனேயே இராணுவத்தை அங்கு அனுப்பி வைத்துள்ளதாக அமெரிக்க இராணுவவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் ஐம்புகடெல் நோட்டி மாகாணத்தில் இடம்பெற்ற அமெரிக்கத் துறவி மற்றும் பிலிப்பைன்ஸ் தாதியொருவரினதும்கொலைகளை அடுத்து தீவிரவாதிகளை சுட்டுத்தள்ளுமாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அந்நாட்டு இராணுவத்தினருக்கு கட்டளை பிறப்பித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-08)

### சிங்கப்பூர் எயார்லைன்ஸ் சேவை

## விஸ்தரிப்பு

(புதுடில்லி)

ஹைதாரபாத்திற்கும்வெளியிடங்களுக்குமான விமான சேவையை சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் நிறுவனம் விஸ்தரிக்க உள்ளதாக மேற்படி நிறுவன செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும்இடையே ஏற்பட்ட உடன்படிக்கையை அடுத்தே இவ் விஸ்தரிப்பு இடம்பெறவுள்ளது.

தற்பொழுது சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் நிறுவனம் புதுடில்லி, மும்பை, கொல்கொத்தா, சென்னை நகரங்களுக்கு விமான சேவையை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-4)

# விமர்சனத்திற்குஉள்ளாகும் ஐன்ஸ்ரீனின் தத்துவம்

(வாஷிங்டன்)

அணு குண்டின் சிற்பி என வர்ணிக்கப்படும் விஞ்ஞானி ஐன்ஸ்ரீனின் சாத்வீகத்தத்துவம் தற்பொழுது கடும் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டு வருகிறது.

சாத்வீகத்துவமென்பது ஒருவர் எங்கிருந்து பார்த்தாலும் பௌதீகத்தின் விதிகள் ஒளியின் வேகத்தை ஒட்டித்தான் அமைந்திருக்கும் என்பதேயாகும்.

விண்வெளியில் இயங்கும் ஆய்வு கூடங்களிலிருந்து துல்லியமான கடிகாரத்தைக் கொண்டு இதுபற்றிய பல சோதனை நடத்தப்பட உள்ளன.

ஏனெனில் பூமியிலிருந்த வாறு இப்பரிசோதனையை மேற்கொண்டால் காலம் இடம் என்பவற்றில் ஏற்படக் கூடிய மாற்றங்களை கண்டறிய முடியாமல் போகலாம்.

அத்தகைய மாற்றங்களை விண்வெளியிலிருந்து ஆக்க முடியுமா? என்பதைப் பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் விண்வெளியில் வைத்து பரிசோதிக்க இருகின்றனர்.

இத்தகைய சோதனையால் மாற்றங்கள் ஏராளம்தென்பட்டால் விஞ்ஞானி ஐன்ஸ்ரீனின் சாத்வீகத்தத்துவம் பொய்ப்பிக்கப்பட்டுவிடும் ஆனால் இச் சோதனையின் முடிவு தெரிய பல காலங்கள் ஏற்படலாம் என நம்பப்படுகிறது.

(க-4)

# வடபகுதி கடற்றொழிலாளரின் போராட்டம் நியாயமானதே

## புதிய ஜனநாயகக் கட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்திற்கு முன்பாக வடபகுதி கடற்தொழிலாளர்கள் நடாத்திவரும் மறியல் போராட்டம் முற்றிலும் நியாயமானதாகும். தமதுமீன்பிடித் தொழிலுக்கு இராணுவத்தால் தொடர்ந்தும் விதிக்கப்பட்டு வரும் தடைகள் கட்டுப்பாடுகள். எல்லைப்படுத்தல்கள் கெடுபிடிகள் போன்றவை நீக்கப்பட்டு சுதந்திரமாககடற்றொழில்செய்யவிடுமாறு கோரியேமீனவத்தொழிலாளர்கள் இப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள் மேற்படிமறியல்போராட்டமானது வடபகுதி கடற்றொழிலாளர்களின் நீண்டதும் துயரம் மிகுந்ததுமான அன்றைய வாழ்வோடுசம்பந்தப்பட்டஒன்றாகும். நியாயம் மிகுந்த இம்மறியல் போராட்டத்திற்கு எமது புதிய ஜனநாயகக் கட்சி தனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது. அதேவேளை கடற்றொழிலாளர்களின்மீன்பிடிக்கும்உரிமையை மறுத்து வரும் ராணுவத்தின் செயற்பாட்டை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது அரசாங்கம் இவ் விடயத்தில் மௌனமாக இருந்து இராணுவ செயற்பாட்டிற்கு உடந்தையாக நிற்பதை எதிர்க்கின்றோம்.

இவ்வாறு புதியஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர்சி.கா.செந்திவேல்வடபகுதிகடற்றொழிலாளர்சங்கங்களின்சமாஜம் யாழ்.செயலகம் முன்பாக நடத்தி வரும் மறியல்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில்: புரிந்துணர்வுஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து நூறு நாட்கள் கடந்தபின்பும் அதில் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு வடக்கு-கிழக்கு மீனவர்கள் சுதந்திரமாக தமது கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை என்றால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அர்த்தம் தான் என்ன என்றுகேட்க வேண்டியுள்ளது.

வடக்கு-கிழக்கின் கடற்கரையோரங்களில் கடலை நம்பியே வாழ்ந்து வந்த கடற்தொழிலாளர்கள் இத்தனை அழிவுகள் இழப்புகளுக்குப் பின்பும் தமதுஉழைப்பின் மீதான நம்பிக்கையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அம்மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் சமாதான சூழலில் தமது தொழிலைச் சுதந்திரமாகச் செய்துவாழ்க்கையை மீட்கலாம் என்றே நம்பியிருந்தனர். ஆனால் ராணுவமும் கடற்படையினரும் அவர்களது சுதந்திரமான மீன்பிடித் தொழிலுக்கு தடைகள் கட்டுப்பாடுகள் விதித்து கெடுபிடிகள் செய்துவருவது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

எனவே வடபகுதி கடற்றொழிலாளர்கள் தொடர்ந்து போராடுவதைத் தவிரவேறு வழி இல்லை என்னும் நிலைக்கே வந்துள்ளனர் அரசாங்கம் சமாதானத்தின் மீது நேர்மையான அக்கறை கொண்டிருக்குமானால் வடபகுதி கடற்றொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென எமது கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தல்

# நடுநிலை வலதுசாரிகள் வெற்றி பெறுவர்

## அவதானிகள் தெரிவிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸில் முதல் சுற்று பாராளுமன்றத் தேர்தல்கள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

தற்போது ஜனாதிபதிப் பதவியிலிருக்கும் ஜத்ஸ்ராத்தின்நடுநிலை வலதுசாரிகளே இத்தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை பெறும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் தென்படுவதாக சர்வதேச அரசியல் அவதானிகள்கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரான்ஸின் 577 ஆசனங்களை கொண்ட பாராளுமன்றத் தேர்தல்களில் 8 ஆயிரத்து 400 க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்

இந்த தேர்தலில் யாரும் அறுதிப் பெரும்பான்மையை பெறாத பட்சத்தில் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு, அடுத்தவாரம் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(க-08)

# வடக்கு- கிழக்கில் ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போர்ச்சூழல் மற்றும் ஏனைய காரணங்களினால் ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகளவழங்குவதற்கு அமெரிக்க றோட்டறிக்க கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்க றோட்டறிக்கழகம், கொழும்பு மேற்குறோட்டறிக் கழகத்தின் மூலம் மாவட்டக்கிளைகளூடாக இந்த உதவியை வழங்க இருப்பதாக மாவட்ட உதவி ஆளுநர்மருத்துவர் சயனொளிபவான் தெரிவித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு றோட்டறிக்கழகம் தேவையான சக்கரநாற்காலிகளின் விபரத்தை அறிவிக்குமாறு கேட்டிருப்பதுடன் இதுவரை 8 பிரதேச செயலாளர்களூடாக 84 விண்ணப்பங்கள பெறப்பட்டிருக்கின்றன இவர்களின் குடும்ப சூழ்நிலையைபொறுத்து முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(க-4)

# இந்தியா- பாகிஸ்தானிற்கு அமெரிக்க ஜனாதிபதி நேரில் விஜயம்

(வாஷிங்டன்)

இந்திய-பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளிடையே நிலவி வரும் பதற்றத்தை தணிக்கும் நோக்குடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூபுஷ் இவ்விருநாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இம்மாத இறுதியில் பயணமாகவுள்ள அதிபர் புஷ் நாடுகளிடையேயுள்ள பதற்றத்தை தணிக்கும் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் பாகிஸ்தானுடனான முறுகல தணிப்பதற்கு இந்தியா அரசியல், இராணுவ ரீதியான அணுகுமுறைகளை கடைப்பிடித்து வருவதாகவும்.

பாகிஸ்தானிலிருந்து அண்மையில் திரும்பியழைக்கப்பட்ட இந்திய அரசியல்துறை அதிகாரிகள் சிலரை மீண்டும பாகிஸ்தானுக்கு அனுப்புவது பற்றி இந்தியா பரிசீலித்து வருவதாக காஷ்மீர் நெருக்கடி தொடர்பான அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆமிரேஷ் தெரிவித்துள்ளார்.

(க-08)

# இன்று சூரிய கிரகணம் வானில் ஓரளவு தெரியும்

(கொழும்பு)

இன்றுநடைபெறவுள்ள சூரியகிரகணம் மற்றும், இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திரகிரகணத்தை வானில்காணலாம்என வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு கிரகணங்களும் ஓரளவு தென்படும் என்றும் ஒட்டு மொத்த கிரகணத்தில் உள்ளபடி இன்றுநடைபெறும் கிரகணத்தில் பிறைபோன்ற நிழல் முழுமையாக தென்படாது என்றும் கிரகணத்தின் ஓரளவு நிழல் மட்டுமே பூமியை வந்தடையும் என்றும் அவர்கள்மேலும் தெரிவித்துள்ளனர்.

(க-4)

வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல்பகைவர் தொடர்பு

குறள்

# வலம்புரி

## முந்துவது யார்?

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைக்கும் காலம் நெருங்கி விட்டது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அவரின் கருத்துப்படி ஆட்சியைக் கலைக்கும் காலம் நெருங்குகிறது என்பதே அர்த்தமாகும்.

ஜனாதிபதி ஒரு கட்சி அரசு இன்னொரு கட்சியாக இருக்கும் போது இரண்டு மனைவியை கட்டியவனின் திண்டாட்டம் என்பது எப்பவோ தெரிந்த உண்மை. இப்போது அந்தஉண்மையை மக்கள் நேரடியாக அவதானிக்க முடிகிறது.

ஒரு புறத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து விடுவதற்கான நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டிருக்கும் அதேநேரம் மறுபுறத்தில் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் அரசின் சார்பில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஈடுபட்டு வருகிறார். அதன் ஒரு கட்டமே தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டுவரும் அரசின் முயற்சியாகும்.

தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது எனினும் அரசின் இத்தகைய போக்குகளுக்கு அரசோடு இணைந்த கட்சிகள் ஆதரவு வழங்குவதாக இல்லை. நாடு யுதத்தில் மூழ்கிப் போயிருக்கும்போது ஜனாதிபதி அரசாங்கத்தைக் கலைக்கவும், அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கவும் ஈடுபட்டால் இனப்பிரச்சினைக்குத தீர்வென்பது எவ்வகையிலும் எட்டப்படமுடியாது.

நாடு யுத்தத்தால் அழிந்து கொண்டிருக்கும் போது அனைவரும் இணைந்து நாட்டைக் காப்பாறற வேண்டிய நேரத்தில பதவியைக்காப்பாற்றும் நடவடிக்கைகளே நடைபெறுகிறது.

இன்னமும் ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதியின் அதிகாரததை அரசு குறைத்துவிட வேண்டும். இல்லையேல் ஆறு மாதங்களின் பின் ஜனாதிபதி தனது அதிகாரத்தைக் காட்டி விடுவார். இதில் யார் முந்துவார் என்பதைக் காலத்தின் அசைவுகளே தீர்மானிக்கப் போகிறது.

# பிள்ளையைப் பொறுத்த மட்டில் பெற்றாரின் கணிப்பீடு முற்று முழுதாகச் சரியானவையா?

பிள்ளைகள் நல் ஆளுமையில் வளர்ச்சி பெற அவர்களின் மனநிலையை மாற்றுவது எப்படி? என்ற கருப்பொருளில் அகவொளி' குடும்பவளத்துணை நிலைய இயக்குநர் அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.

பிள்ளைகள் சிறுவயதில் தமது பெற்றோர் சொல்லும் பண்புகளை முழுவதுமாக உள்வாங்குகிறார்கள். பெற்றோர் தம்மைப்பற்றி வைத்திருக்கின்ற கண்ணோட்டத்தைஅப்படியே நம்பி அதன்படிவாழப் பழகிக் கொள்கிறார்கள். வளர்ந்தோரைப் போன்று சிறுபிள்ளைகளுக்கு நல்ல, மற்றும் கெட்ட பண்புகளை வேறுபிரித்து அறியத் தெரியாத தனால் அவர்கள், பெற்றோர் ஆரம்பத்தில் தம்மீது கொண்டிருக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றாற் போல தமது எதிர் கால வாழ்வை இசைவாக்கிக் கொள்கிறார்கள். எனவே பெரியவர்கள் சிறுவரி

## எம். எஸ். எஸ். கீர்த்தி

டத்தில் காணப்படும் நல்ல பண்புகளை தட்டிக்கொடுத்தும்பாராட்டியும்மேலேதூக்கி விடும் அதே வேளை தீயபழக்கங்களை அன்பான முறையில் எடுத்துச் சொல்லி அப்பிள்ளை அக் கெட்ட பண்புகளிலிருந்து விலகி வாழ தம்மாலான முயற்சிகளை எடுக்க வேண்டும். திரும்பத் திரும்ப அவனில் அவளில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி தனிமைப்படுத்த முயலும் போது அப் 'பிள்ளை அத்தீய பண்புகளால் மேலும் ஆட்கொள்ளப்படும்துர்ப்பாக்கிய சூழலே குடும்பத்தில் எஞ்சுகிறது. தட்டிக்கொடுத்தலும் மனம் விட்டுப்பேசுதலும்ஒரு குடும்பத்தில்பெற்றோர், பிள்ளைகள் உறவில் நெருக்கத்தை அதிகரிக்கின்றன என்ற உண்மையை உணர்ந்து செயற்பட்டால் குடும்பங்கள் குதூகலமாக அமையும்.

ஆளுமை என்றால் என்ன என்பது பற்றி நோக்குகின்றபொழுது நடத்தை அல்லதுவளர்ச்சி

மனித செயற்பாடு- உணர்வுகள், எண்ணங்கள் இவை மூன்றும் சேர்ந்து ஒரு சூழலில் எவ்வாறு மனிதனைச் செயற்படுத்துகின்றன என்பதிலேயே அவனின் ஆளுமை தங்கியிருக்கிறது. உளவியலில் வளர்ச்சி, பெருக்கம் (பருமன்) என்பவற்றை ஆளுமையாகக் கருதாது விடினும் அவை அதன் ஒரு பகுதியாக அமைந்து வருகின்றன.

சிறுவயதில் பெற்றோர் தன்னைப் பற்றிச்சொல்லும் பண்புகளை வைத்து ஒரு பிள்ளை தனக்குள்ளே ஒரு இடத்தை (Self Image) உருவாக்கிக் கொள்கிறது. அவர்கள் கூறும் கருத்துக்களை உள் வாங்கி அமைக்கப்பட்ட அப் படம் பெற்றோரின் பார்வையிலும் ஒத்த தன்மையினதாகவே அமைகிறது. அவ் வழியாக பிள்ளையின் ஆளுமை வளரத் தொடங்குகிறது. ஆளுமை கல்லிலே செதுக்கப்பட்ட ஒன்று அல்ல. அதன் வளர்ச்சியும் தேய்வும் காலத்தின் போக்கிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. காலமும் நேரமும் ஆளுமையை மாற்றக் கூடிய அல்லது வளர்க்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கு கின்றன. சிறுவயதில் பெற்றோரோடு மிக நெருக்கமாக இருந்த பிள்ளை வளரத் தொடங்கு கின்றபொழுதுஅவர்களின்பிடியிலிருந்து தூரச் செல்ல முயற்சிக் கின்றது. இந் நிலையில் அவர்கள்கருத்துக்கும், அவன் அல்லது அவளின் கருத்திற்கும் இடையே முரண்பாடுகள் தோன்றத் தொடங்குகின்றன. இந் நிலையில் அவரவர் கற்பனையில் உள்ள படங்களில் வேற்றுமைகள் அதிகரிக்கின்றன. ஒரு பிள்ளையின் வளர்ச்சி பிள்ளையினது எண்ணங்கள் செயற்பாடுகளிலும் பெற்றோரின் பார்வை நடத்தைகளிலும் தங்கியிருப்பதால் இவற்றினிடையே ஒற்றுமை காண நாம் பழகிக் கொள்ள வேண்டும். நாம் எமது மன நிலைகளை அறிவுசார் முறையில் உருவாக்கிக் கொள்ள எவ்வளவு தூரம் பிரயத்தனம் செய்கின்றோமோ அதன்படி எமது ஆளுமைப் பண்பும் பெறுகிறது.

பெற்றோர்கள் நம்புவது சரியா?

பெற்றோரின் கண்ணோட்டம் பிள்ளையைப் பொறுத்த வரையில் முற்றுமுழுதாக உண்மையானது அல்ல, சில வேளைகளில் அவை தன்மயப்பட்ட சாட்டுதலாகவும் அமைந்து விடுகின்றன, தமது இயலாமைகளை குழந்தையின் மீது வெளிப்படுத்தும் பெற்றோர் தம் ஊகங்களை நியாயப்படுத்த முனையும் போது எதிர்காலத்தில் அவன் அல்லது அவள் தீவிரமும் கோபமும் நிறைந்தவர்களாக மாறத்தாமே வழி சமைத்துக் கொடுக்கிறார்கள் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை பெற்றோர் சொல்வதை அப்படியே முழுமையாக எடுத்துக் கொள்வதாக வேர் ஜீனியா டிமோல் என்ற உளவியலாளர் சொல்கிறார். மகிழ்ச்சிப்படுத்தல், பாராட்டுதல், மெச்சுதல் மூலமான அணுகுமுறைகள் மூலம் நல்லபிரசைகளாக அவர்களை வளர்த்தெடுக்க முடியும்' இவற்றை வளர்ச்சியின்மொழி (Language of becoming) என்கின்றோம். பிள்ளையின் உருவாக்கத்தில் வளர்ச்சியின் மொழி நல்ல முன்னேற்றத்தைத் தருகிறது. எனவே வளருகின்ற மொழியை வாழ்வில் இன்றிலிருந்தே கடைப்பிடித்தால் பிள்ளைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது நெருக்கீடான சூழல்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். பெற்றோர்-பிள்ளை இடையிலான தூரத்தைக் குறைத்தலும் பாசப்பிணைப்பை அதிகரித்தலும்தனிமையை உணராதுதடுத்தலும் இருவரும் இணைந்து தீர்மானங்களை எடுத்தலும் பெற்றோர் எதிர்பார்க்கும் நல்ல பிள்ளையை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக விளங்குன்றன.

எனவே எதிர்காலப் பிரசைகளான இன்றைய குழந்தைகள் நல்ல பாதையில் வழி நடத்தப்படவும் அதனால் பண்புள்ளசமுதாயம் உருவாகவும் பெற்றோரின் பங்களிப்பும் பொறுப்பும் பெரிதும் வேண்டப்படுகின்றன. உண்மையான அன்பைச்செலுத்துங்கள் உறுதியான மனிதப் பண்போடு வாழ்வோம். ●

## ஊடகத்துறையினரின் சுதந்திரத்தை வலுப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

ஊடகத்துறை சுதந்திரத்தை வலுப்படுத்த அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஊடக சுதந்திரம் தொடர்பாக முந்திய சட்ட வரைபுகள் இரண்டினை எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபபோவதாக பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டிடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி அளித்த உறுதிமொழிக்கேற்ப ஊடகச் சுதந்திரத்தை வலுப்படுத்த ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதாகவும், கலைப்படைப்புக்களை தணிக்கை செய்யும் அதிகாரம் தனி நபர் ஒருவருக்கு இருக்கக் கூடாது என்றும் தற்போது பிரிட்டனில் நடைமுறையில் இருக்கும் திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு இங்கு செயற்படுத்தவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-03)

## மீன்பிடித் தடையை நீக்க நடவடிக்கை எடுப்பேன்

### அமைச்சர் கரு உறுதி

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் வருகைதந்த மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரிய நேற்றைய தினம்வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசப் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில், மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில்செய்வதற்கு வகை செய்யுமாறு சமாசப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் கோரிக்கைவிடுத்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் தற்போதைய மீன்பிடிக் கட்டுப்பாடுகள் ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனினும் இந்த மீன்பிடிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இந்த சந்திப்பில் இந்து கலாசார அமைச்சர்தி. மகேஸ்வரன், பாராளுமன்றவிவகார அமைச்சர் அஸ்வர், பலாலி படைத்தளபதி சரத்பொன்சேகா ஆகியோரும் கலந்து கொண்டனர். (த- 43)

## தமிழர் பண்பாட்டை

டுக்காரர்களுக்கு ஏன் உலகத் தமிழர்களுக்கே சொந்தமானவர்.

அத்தகைய ஒரு மாபெரும் தலைவரை இழந்துவிட்டோம்.

மாமனிதர் சிவாவுக்கு கிளிநொச்சியில் வைத்து தம்பிமார் வழங்கிய வரவேற்பை பார்த்தபோது நாற்பதாண்டுகள் ஈழத்தமிழருக்காக வாழ்கின்றஎனது இதயம் மகிழ்வால் பூரித்தது.

எங்கள்மக்கள்எதைவேண்டுமானாலும் இழக்கட்டும்.

ஆனால்பண்பாட்டை மட்டும் இழக்கக் கூடாது என்றும் அவர் கண்கலங்கிச் சொன்னார்.

அத்தகைய பண்பாட்டை எங்கிருந்தாலும் வளர்ப்பது தான் நாம் சிவாஐயாவுக்கு செய்யும் நன்றிக் கடன் ஆகும் என்றுஜனார்த்தனன் மேலும் தெரிவித்தார். (இ- 41)

## தினசரி தியானம்

### சினம்

சினத்தைப் பொருளென்று கொண்டவன்
கேடு நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

- திருக்குறள்

செம்பொருளே, நான் சினத்தின் வசப்பட்டு விடுவேனாகில் உன்னைச் சேவிக்கத் தகுதியற்றவன் ஆய்விடுவேன்.

அவன் என்னைத் திட்டினான், அடித்தான், வென்றான், ஏமாற்றினான் இத்தகையை எண்ணமுடையார் சினத்தை வெல்லமுடியாது. இத்தகைய எண்ணங்களுக்கு மனத்தகத்து இடங்கொடாதவர்களேசினத்தை வெல்லுவர். இவ்வுலகில் சினத்தைக் கொண்டுசினத்தை ஆற்றிவிடமுடியாது. சினமின்மையைக் கொண்டே சினத்தை வெல்லலாம்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் ஜப்பானிடம் ரஷ்யா தோல்வி!

## தலைநகர் மொஸ்கோவில் கலவரம்

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ரஷ்ய அணி தோல்வியடைந்ததை அடுத்து ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கலவரம் வெடித்துள்ளது.

ஜப்பான் அணிக்கும் ரஷ்யா அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஜப்பான் அணி 1-0என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்த உதைபந்தாட்டத்தை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் திரையில் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் ரஷ்ய அணியின் தோல்வியை சகிக்க முடியாது கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கலவரத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 20ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். பல கார்கள் எரிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை கொஸ்ராரிக்கா அணிக்கும் துருக்கி அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் 1-1என்ற கோல் கணக்கில் ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடித்துக் கொண்டன.

மெக்சிக்கோ அணிக்கும் ஈக்குவடோர் அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் மெக்சிக்கோ அணி 2:1 என்று கோல்கணக்கில் வெற்றி யீட்டியது. (த)

---

### சிம்மக்குரலோன்...

மாவை சேனாதிராஜா, சிவசக்தி ஆனந்தன், இரா.சம்பந்தன், வெள்ளிமலை, ஜோசப் பரராஜசிங்கம், வீ.ஆனந்தசங்கரி

மற்றும் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனன், திருமதி அமிர்தலிங்கம், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ் மேஜர் எஸ். கந்தையன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

காலை முதல் மாலை வரை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து அன்னாரின் புகழுடல் தாங்கிய பேழை விஷேட வாகனத்தில் வைக்கப்பட்டது.

கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் எனத் திரண்ட பெருமளவிலான சனத்திரளுடன் அமரர் சிவாவின் புகழுடல் வீட்டில் இருந்து இறுதி யாத்திரைக்காக மயானம் நோக்கிப் புறப்பட்டது.

வீதியின் இருமருங்கிலும் மயானம் வரை ஆயுதங்கள் இன்றிப் பொலிஸார் அணிவகுத்து நின்றனர்.

சோனப்பு மயானத்தில் பெருந்திரளான சனத்திரளின் மத்தியில் சிவாவின் சிதைக்கு அவரது மகன் தீ மூட்டினார்.

பெருந்தலைவரை இழந்த சோகத்தில் நேற்றுக் குடாநாடே சோகமயமாகி காட்சியளித்தது. தமது மன ஆதங்கத்தை மக்கள் சோககீதம் இசைக்கப்பட்டும் கறுப்பு வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டும் தமது வர்த்தக பொது நிலையங்களை மூடியும் வெளிப்படுத்தினர்.

சிவா என்னும் பெருஞ்சிகரம் மறைந்த அவரின் சிம்மக்குரல் மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியமை பெரும் வேதனையாக மக்கள் முகங்களில் தெரிந்தது.(இ-10-19-23-41-43)

---

### பாதுகாப்பு அமைச்சர்...

தளபதிகளுடன் இரு தரப்பு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சர் திலக் மாரப்பனவுடன் கடற்படைத்தளபதியும் மற்றும் படை உயரதிகாரிகளும் சீனா சென்றுள்ளனர.(ம)

---

### நோர்வேயின் சமாதான...

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே அரசாங்கம் மேற்படி முடிவுக்கு வந்திருப்பதாக அரச வட்டாரங்கள் தெரவித்தன.

அனுசரணையாளர் என்பது நேரடிப பேச்சுக்களில் பங்கு பற்றாமல் பேச்சுக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல் எனப் பொருள்படும் இடையீட்டு நடுவர் (Moderator) என்பது பேச்சுக்களில் கலந்து கொள்ளாமல் ஆனால் பாராளுமன்றத்தின் சபாநாயர் போன்று பேச்சு வார்த்தை மேசையில் அமர்ந்து இருந்து சிக்கல்கள் எழாமல் பார்த்துக் கொள்வது என்றும். சமரசப் பேச்சாளர் என்பவர் பேச்சுக்களில் தானும் கலந்து கொண்டு பேச்சுக்களின் முன்னேற்றத்தைக் கவனிப்பவர் என்றும் வியாக்கியானப்படுத்தப்படுகின்றது.

நோர்வே ஒரு இடையீட்டு நடுவராகவே செயற்படும் என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமைக்கு அறிவித்துள்ளது. விடுதலைப்புலிகளின் இது தொடர்பான நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை. ஆனால் அவர்களின் இணையத்தளம் சமரசப் பேச்சுக்களில் ஈடுபடும் ஒரு நடுவரே விரும்பத்தக்கது என்று முன்னர் தெரிவித்திருந்தது. நோர்வேயை அனுசரணையாளராக பங்குபற்ற வைத்தது பொ.ஜ.முன்னணி அரசாங்கமே ஆகும்.

இதேவேளை இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசாமல் சகல அடிப்படையான பிரச்சினைகளையும் பேசவேண்டும் என்று அரசாங்கம் விரும்புவதைத் தொடர்ந்து யூன் மாதப் பிற்பகுதியில் நடைபெறவிருந்த பேச்சுக்கள் தாமதமடையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

---

### இந்தியாவின்...

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அரசு ஆர்வமாக உள்ளது. இந்தியாவின் ஒத்துழைப்பு இல்லாமல் சமாதான முயற்சிகள் ஒரு போதும் வெற்றியடையமாட்டாது.

இந் நிலையில் அரசின் சமாதான முயற்சிக்கு இந்திய அரசும் இந்திய அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுமா? என செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த பிரதமர் ரணில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்குவது தொடர்பாக அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார். (வ)

---

# ஜெனரேற்றர்களை அமைச்சர் கருஜெயசூரியா பார்வையிட்டார்

(திருநெல்வேலி)

ஏ-9 வீதியூடாக சுன்னாகம் மின்சார சபைக்கு எடுத்து வரப்பட்ட பாரிய ஜெனரேற்றர்களை மின்சகதி எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய நேற்றைய தினம் சென்று பார்வையிட்டார்.

ஜெனரேற்றர்களை பார்வையிட்ட அமைச்சர் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு உட்பட குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் 24 மணிநேர மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இதேவேளை யுத்தத்தினால் பாரிய அழிவுக்குள்ளான சாவகச்சேரி நக்ரையும் அமைச்சர் சென்று பார்வையிட்டுள்ளார். (த-43)

---

### பூரண ஹர்த்தாலுக்கு...

✠புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக்கப்பட்டு நூறு நாட்கள் கடந்த பின்பும் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், பொதுக்கட்டடங்களில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேறாமை

✠பனை, தென்னை வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுதல்

✠ பொது மக்களின் மீள் குடியேற்றம் தடுக்கப்படுவதுடன், மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படுகின்றமை.

இவ்வாறான செயற்பாடுகள எமது மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதை பாதிப்பதோடு அவர்களின் பொருளாதாரமும் மிக மோசமாக பின் தள்ளப்படுகின்றது.

அத்துடன் இவை சமாதானம் நோக்கிய பாதையில் தடைக்கற்களாகவும் அமைகின்றன. இத்தடைகளை அகற்றி சமாதான முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் முகமாக வும் அரசின் அசமந்தப் போக்கைக் கண்டிக்கும் முகமாகவும் எமது ஒன்றிணைந்த எதிர்ப்பைத் தெரிவித்து எதிர்வரும் 12.06.2002 (புதன்கிழமை) அன்று குடாநாடு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

அன்றைய தினம் மருத்துவ சேவைகள தவிர்ந்த அனைத்து அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் துறையினர், வர்த்தக நிலையங்கள் (சந்தைகள் உட்பட) பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், போக்குவரத்துச் சேவைகள் (ஏ-9 போக்குவரத்து உட்பட) அடங்கலாக அனைத்துச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தி எமது முழுமையான எதிர்ப்பை அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

# செல்வம் எம்.பியின் மனைவி காலமானார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கல நாதனின் மனைவி திருமதி சந்திரா அடைக்கலநாதன் சென்னை அப்பலோ மருத்துவமனை யில் நேற்றிரவு 8மணிக்கு காலமானார்.

புற்றுநோய் காரணமாக சென்னை அப்பலோ மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை கடந்தவாரம்செல்வம் அடைக்க லநாதன் சென்னைக்கு சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

---

# நயினாதீவு நாகபூஷணி இன்று கொடியேற்றம்

(யாழப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 16தினங்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 23ம் திகதி தேர்த்திருவிழாவும் 24ம்திகதி தீர்த்தத்திருவிழாவும் 25ம்திகதி தெப்பத்திருவிழாவும் நடைபெறும். (இ)

---

# குருநகர் ஐஸ் நிலைய படையினர்வெளியேறுவர்

(திருநெல்வேலி)

குருநகர் ஐஸ் தொழிற்சாலையில் நிலைகொண்டிருக்கும் படையினரை ஒரு கிழமைக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு அமைச்சர் கருஜெயசூரிய குருநகர் பகுதி படை அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி தொழிறசாலையில் நிலைகொண்டிருக்கும் படையினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு குருநகர்ப்பகுதி மக்கள் அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(த-43)




பதவி வெற்றிடம்

கணனி இயக்குநர்கள்

ஆண் பெண் இரு பாலாரிடமும் இருந்தும் கணனி இயக்குநர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை
"ஆளணி முகாமையாளர்"
வலம்புரி இல.15
வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வலம்புரி நிர்வாக உத்தியோகத்தர்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்




V.S.P.லஞ்ஒயில்

தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



(C/4243)


## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் குலமணி

அரியாலை மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் குலமணி 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் பொன்னு ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும், கமலேஸ்வரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தலிங்கம், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துஸ்யந்தினி, சுகந்தினி, தர்சயந்தினி, இஷாந்தினி, அனுசியா, அஜந்தினி, பிரியதர்சினி, சுஜீவன், சோபிகா, பிரதீபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீர்த்தனாவின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான இராசையா, பூபதி மற்றும் பவளமணி, சரஸ்வதி, யோகராணி, தர்மகுலராசா, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லையா சந்திரா, அற்புதராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 67,ஆசீர்வாதப்பர்வீதி நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

67, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்
(கி.3561)

தகவல்:
செ.தனேஸ்வரன்
பெறாமகன்(இ.போ.ச)






வன்னியில் விற்பனை ஆகின்றது.

லாலா சோப் எமது தயாரிப்பான சண்சயின் சோப்.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில நித்திய அன்னதானம் பற்றிய

# விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிப்பதற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. திருவருளைப் பருகிச் செல்லும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கவென ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதியில் நித்திய அன்னதானம் அம்பிகையின் அருளாசியுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 1998இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய அன்னதானம் அடியார்களின் பேராதரவுடன் குறைவின்றி சுமார் 3 வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மகோற்சவகாலம்(16நாள்) தவிர ஏனைய நாட்களில் இத்திருப்பணி நித்திய அடியார்பணியாக நிறைவேற்றப்படுகின்றது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது படைக்கும் அன்னையின் திருவருள்தான் என்னே!

நீங்களும் இத்திருப்பணியில் இணைந்து அடியார்களுக்கு அமுது படைக்கும் அருட்பணியில் பங்குபற்றுங்கள். ஒரு முறை மட்டும் ஐயாயிரம் (5000/=) ரூபா செலுத்தினால் போதும் உங்களின் பெயரால் ஆண்டு தோறும் குறிப்பிட்ட திகதியில் நித்திய அன்னதானம் வழங்கப்படும். பணத்தை ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ அல்லது யாழ் வர்த்தக வங்கியின் 12330 கணக்கு இலக்கத்திலோ அல்லது புறக்கோட்டை வர்த்தக வங்கியின் 01.2426285-01 கணக்கு இலக்கத்திலோ வைப்பிலிடலாம். பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு தபாற்கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ வரைய முடியும். இத்திட்டத்தின் கீழ் இணைந்து அன்னையின் அருளாசியினைப் பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்.

வேறு தனிநபர்களுக்கோ-நிறுவனங்களுக்கோ நித்திய அன்னதானம் தொடர்பாக நிதி வசூலிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

(C/4349)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.